# MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN (AUTONOMOUS), VANIYAMBADI

## PG AND RESEARCH DEPARTMENT OF TAMIL

## II M.A., TAMIL – SEMESTER - IV

| |
|---|
| **Core Course -1:** பெண் படைப்பாளர்களின் இலக்கியம்<br>Code: 23PETA43 |
| **Unit: 5** இன்றைய பெண் கவிஞர்களின் படைப்புகள்<br>1. ரா மீனாட்சி.2. சு கிர்தா ராணி3. வெண்ணிலா4. குட்டி ரேவதி5. சல்மா.<br>6. மாலதி மைத்திரி 7. தமிழச்சி தங்கபாண்டியன்.<br>8.ஆண்டாள்பிரியதர்ஷினி |
| **Learning Objectives:** தமிழ் இலக்கிய பரப்பில் பெண் படைப்பாளர்களை அறிந்து கொள்ளுதல்.பெண்ணிலக்கிய கொள்கைகளை விளங்கிக் கொள்தல் பெண் படைப்பாளர்களின் இலக்கியங்கள் வழி வாழ்வியலை உணர்தல்.காலந்தோறும் பெண் மொழியின் உளவியலை உணர்ந்து கொள்ளுதல்.பெண் படைப்பாளர்களின் நெறிகளைவிளங்கிக்கொள்ளுதல்: |
| **Course Outcome:**<br>1.தமிழ் இலக்கிய பரப்பில் பெண் படைப்பாளர்களை அறிவர்.<br>**2.**பெண் இலக்கிய கொள்கைகளை விளங்கிக் கொள்வர்.<br>3.பெண் படைப்பாளர்களின் இலக்கியங்கள் வழி வாழ்வியலை அறிவர்.<br>4.காலம் தோறும் பெண் மொழியின் உளவியலை உணர்ந்து கொள்வர்.<br>5.பெண் படைப்பாளர்களின் சொல் நெறிகளை விளங்கிக் கொள்வர் |

நவீன இலக்கிய உலகில் அறியப்படும் முன்வரிசைக் கவிஞர்களில் ஒருவர் அ. வெண்ணிலா. கவிஞர், சிறுகதை ஆசிரியர், கட்டுரையாளர், நாவலாசிரியர், சிறுபத்திரிக்கை ஆசிரியர், பள்ளி ஆசிரியர், ஆய்வாளர், பதிப்பாளர் என பன்முக அடையாளங்களுடன் தமிழ் உலகில் இயங்கிவருகிறார் அ.வெண்ணிலா. பெண்ணிய அடிப்படையிலான கருத்துக்களை

முன்னெடுத்து இலக்கியம் படைத்து வருவதும், அன்றாட வாழ்வின் இன்னல்களை படைப்பாக்குவதும் இவரது தனித்துவமாகும்.

இவர் எழுதிய படைப்புகள் ஆங்கிலம், மலையாளம், இந்தி என பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நூல்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களில் பாடமாகவும் இடம்பெற்றுள்ளன. 2009-2010 ஆம் ஆண்டுகாலத்தில் தமிழகத்தின் சமச்சீர் கல்வி பாடத்திட்டக்குழுவில் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி புதிய பாடப்புத்தக உருவாக்கத்தில் பங்களிப்பு வழங்கியுள்ளார்.

1971ஆம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் சி. அம்பலவாணன் - வசந்தா தம்பதியருக்கு ஒரே மகளாகப் பிறந்தார். ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியிலும், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் பள்ளிக்கல்வி பெற்றார். கணிதப் பாடத்தில் இளநிலை பட்டம் பெற்றபின் உளவியலில் முதுநிலை, வணிகவியலில் முதுநிலை தொடர்ந்து கல்வியியலில் முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். சிறுவயதில் இருந்தே புத்தகங்கள் வாசிக்கத் தொடங்கினார் . தந்தை திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர் என்பதால் 12 வயதிலேயே பெரியாரின் புத்தகங்கள் அறிமுகமாயின. வாசிப்பு புதிய வாசல்களைத் திறந்துவிட்டது. இலக்கிய நண்பர்களுடன் இணைந்து நடத்திய "பூங்குயில்" என்ற இலக்கியச் சிற்றிதழில் துணியாசிரியராகப் பணியாற்றினார். பூங்குயில் இதழுக்கான கவிஞர்கள் சந்திப்பு ஒன்றில் கவிஞர் மு.முருகேஷ் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. ஏழாண்டுகால நட்பு பின்பு காதலாகி திருமணம் செய்துகொண்டனர்.

பிள்ளைகள் கவின் மொழி, நிலாபாரதி, அன்பு பாரதி. பிள்ளைகளின் பெயரின் முதலெழுத்தைக் கொண்டு இருவரும் இணைந்து உருவாக்கியது "அகநி" பதிப்பகம் ஆகும். இதன்மூலம் கருத்தாழமிக்க நூல்கள் வெளிவருகின்றன. வந்தவாசியில் குடும்பத்துடன் வசித்து வரும் அ.வெண்ணிலா தான் படித்த அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கணித ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

பெண்களின் அக உலகைப் பாசாங்குகளின்றி தனது படைப்புகளில் முன்வைக்கிறார். சமூகத்தில் பெண் குழந்தைகளை வளர்ப்பதில் உள்ள சிக்கல்களைப் பற்றியும், புறச்சூழல்களில் பெண்கள் நாள்தோறும் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் பற்றியும் படைப்புகளில் காட்சிப்படுத்தியிருக்கிறார். 25 வயதிற்குப் பிறகு திருமணம், அடுத்தகட்ட வாழ்வியலை நினைக்கும்போதுதான் முதல்முறை பயம் வந்தது. பெண் என்ற இடம் இந்த சமூகத்தில் கொடுக்கக் கூடிய பயம் உருவான நேரம்தான் முதன் முறை கவிதை வந்த நேரமாக பார்க்கிறேன்” என்கிறார் **அ.வெண்ணிலா**.

வெண்ணிலா அவர்களுக்கு பிடித்த பெண் பாற்புலவர் ஔவையார். படைப்பினுடைய வேலை வாளேந்திப்போவதல்ல. வாளேந்திப் போவோரை கூர்தீட்டல் செய்யும் வேலையை படைப்பு செய்ய முடியும் என்கிறார். நம்மை நாமே உள்நோக்கி ஆராய்வதற்கு எழுத்து ஊடகமாக இருக்கிறது. வாசிப்பில் மேலோங்கி வந்தால் நம்மைச் சுற்றியுள்ள இந்த முரண்பாடான சமூகத்தை அறியமுடியும் என்கிறார் அ.வெண்ணிலா.முதல் கவிதைத் தொகுப்பு "என் மனசை உன் தூரிகை தொட்டு" 1998-இல் வெண்ணிலா - முருகேஷ் திருமணத்தையொட்டி வெளியானது. முதல் சிறுகதை "பட்டுப்பூச்சிகளைத் தொலைத்த ஒரு பொழுதில்" கணையாழி இதழில் வெளியானது. இணையர்

முருகேஷுக்கு வெண்ணிலா எழுதிய காதல் கடிதங்கள் தொகுக்கப்பட்டு "கனவிருந்த கூடு" என்ற தலைப்பில் வெளியானது. அகநியின் 100-ஆவது வெளியீடாக "ஆனந்தரங்கப்பிள்ளை தினப்படி சேதிக்குறிப்பு" நூல் வரிசையை டாக்டர்.மு.ராஜேந்திரன் ஐ.ஏ.எஸ். அவர்களுடன் இணைந்து தொகுத்து, வெளியிட்டார். ஒரு பேரரசனின் தனிமைக்குள் பயணிக்கும் சுவாராஸ்யமான புனைவாக "கங்காபுரம்" நாவஇனை எழுதினார். கி.ராவின் கதைசொல்லி மற்றும் புத்தகம் பேசுது இதழ்களின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியிருக்கிறார். 2002 ஆம் ஆண்டு ஐதராபாத்தில் நடைபெற்ற பன்னாட்டு பெண் எழுத்தாளர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாகப் பங்கேற்றார். 2011 ஜனவரியில் புதுதில்லியில் நடைபெற்ற எழுத்தாளர்களுக்கான காமன்வெல்த் மாநாட்டில் தமிழகப் பிரதிநிதியாக கலந்துகொண்டார்.

"சகுந்தலாவின் காதலன்" என்ற திரைபடத்தில் வசனகர்த்தாவாகவும், துணை இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார். இரண்டு திரைப்படங்களில் பாடல்கள் எழுதியுள்ளார்.

**வெளிவந்துள்ள நூல்கள் கவிதைகள்**

1.என் மனசை உன் தூரிகை தொட்டு. 1998

2. நீரில் அலையும் முகம். 2000

3. ஆதியில் சொற்கள் இருந்தன.2002

4. இசைக் குறிப்புகள் நிறையும் மைதானம்.2005

5.கனவைப்போலொரு மரணம்.2007

6. இரவு வரைந்த ஓவியம்.2010

7. துரோகத்தின் நிழல்.2012

8. எரியத்துவங்கும் கடல்.2014

9.கடிதம் கனவிருந்த கூடு.2000

**கட்டுரைகள்**

1. பெண் எழுதும் காலம்.2007
2. ததும்பி வழியும் மௌணம்.2014
3. கம்பலை முதல்.2015 (டாக்டர். மு.ராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்களுடன் இணைந்து)
4. தேர்தலின் அரசியல்.2016
5.அறுபடும் யாழின் நரம்புகள்.2017
6. எங்கிருந்து தொடங்குவது.2017
7. மரணம் ஒரு கலை.2018

**சிறுகதைகள்**

1. பட்டுப்பூச்சிகளைத் தொலைத்த ஒரு பொழுதில்.2005
2. பிருந்தாவும் இளம்பருவத்து ஆண்களும்.2013
3. இந்திரநீலம்.2020

**ஆய்வு**

1. தேவரடியார் :கலையே வாழ்வாக,2018

**நாவல்கள்**

1. கங்காபுரம்.2018
2. சாலாம்புரி,2020

**தொகுத்த நூல்கள்**

1.வந்தவாசிப்போர் - 250- 2010 (டாக்டர் மு.ராஜேந்திரன் இ.ஆ.ப அவர்களுடன் இனணந்து,)
2. நிகழ்முகம்.2010
3. மீதமிருக்கும் சொற்கள்.2015
4.காலத்தின் திரைச்சீலை ட்ராட்ஸ்கி மருது.2015
5. கனவும் விடியும்.2018

**பதிப்பு**

1.இந்திய சரித்திரக்களஞ்சியம். 8 தொகுதிகள்.2011
2.ஆனந்தரங்கப்பிள்ளை தினப்படி சேதிக்குறிப்பு, 12 தொகுதிகள்-2019 (டாக்டர் மு.ராஜேந்திரன் இ.ஆ.ப

அவர்களுடன் இணைந்து)

**விருதுகள், பரிசுகள்**

1. சிற்பி அறக்கட்டளை விருது.
2. கவிஞர் தேவமகள் அறக்கட்டளை விருது.
3. தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் வழங்கும் செல்வன் கார்க்கி விருது.
4. ஏலாதி அறக்கட்டளை விருது.
5. கவிஞர் வைரமுத்து வழங்கும் கவிஞர் தின விருது.
6. திருப்பூர் மத்திய அரிமா சங்கம் வழங்கும் சக்தி-2005 விருது.
7. சென்னை புத்தகக் கண்காட்சி-2005 ஆம் ஆண்டில் இயக்குனர் பார்த்திபன் வழங்கிய சிறந்த படைப்பாளி விருது.
8. நெய்வேலி புத்தகக் கண்காட்சி-2005இல் வழங்கிய சிறந்த எழுத்தாளர் விருது.
9. தமிழக அரசின் சிறந்த கவிதை நூலுக்கான விருது-2008
10. செயந்தன் நினைவு கவிதை விருது-2010
11.பிருந்தாவும் இளம் பருவத்து ஆண்களும் சிறுகதைத்தொகுப்பிற்காக தமுஎகச புதுமைப்பித்தன் விருது-2013
12. கங்காபுரம் நாவலுக்காக கோவை கத்தூரி சீனிவாசன் அறக்கட்டளையின் ரங்கம்மாள் நினைவு விருது
13. சமயபுரம் எஸ்.ஆர்.வி பள்ளியின் படைப்பூக்கத் தமிழ் விருது.
14. அவள் விகடனின் இலக்கிய விருது.
15. தமிழக அரசின் நல்லாசிரியர் விருது.

**இணைய இணைப்புகள்**

அ.வெண்ணிலா நூல்கள் விக்கி பீடியா பக்கம் விகடன் நேர்காணல் காணொளி நேர்காணல் வானம்ஆர்க்கிபால்ட் மேக்லீஷ் எழுதிய ″கவிதைக் கலை″ -பிரம்மராஜனின் மொழிபெயர்ப்பு கவிதை ஒரு தமிழச்சி தங்கப்

பாண்டியனின் என்ஜோட்டுப் பெண் என்ற கவிதை தொகுப்பில் அவர் கூறிய பெண்ணே சிந்தனைகள் பெண்ணுக்கு ஏற்படும் அவலங்கள் அவளுடைய உணர்வுகள் பாலியல் சிந்தனைகள் பாலியல் கொடுமைகள் பற்றி குறிப்பிடுகின்றார்.

**வானம்**

ஆர்க்கிபால்ட் மேக்லீஷ் எழுதிய "கவிதைக் கலை" - பிரம்மராஜனின் மொழிபெயர்ப்பு கவிதை ஒரு தமிழச்சி தங்கப் பாண்டியனின் என்ஜோட்டுப் பெண் என்ற கவிதை தொகுப்பில் அவர் கூறிய பெண்ணே சிந்தனைகள் பெண்ணுக்கு ஏற்படும் அவலங்கள் அவளுடைய உணர்வுகள் பாலியல் சிந்தனைகள் பாலியல் கொடுமைகள் பற்றி குறிப்பிடுகின்றார். சுகிர்தா ராணி பெண்ணே சிந்தனையாளர்.ஒரு கவிதை இருக்க வேண்டும் உணர முடிவதாய் உருண்டு திரண்ட பழம் போல மௌனமாய் பேச்சற்று புராதனப் பதக்கங்கள் கட்டைவிரலுக்குத் தட்டுப்படுவது போல் பாசி வளர்ந்து படிந்த கைப்பகுதிகளால் தேய்ந்த ஜன்னல் விளிம்புகளைப் போல மௌனமாய் ஒரு கவிதை வார்த்தையற்றிருக்க வேண்டும் பறவைகளின் பறத்தல் போல நிலா உயர்வதைப் போல் காலத்தினுள் கவிதை இயக்கமில்லாதிருக்க வேண்டும் இரவு பின்னலிட்ட மரங்களை குறுங்கிளை அடுத்த குறுங்கிளையாக நிலா விடுவிப்பது போல, ஒரு கவிதை இருக்க வேண்டும் உணர முடிவதாய் உருண்டு திரண்ட பழம் போல மௌனமாய் பேச்சற்று புராதனப் பதக்கங்கள் கட்டைவிரலுக்குத் தட்டுப்படுவது போல் பாசி வளர்ந்து படிந்த கைப்பகுதிகளால் தேய்ந்த ஜன்னல் விளிம்புகளைப் போல மௌனமாய் ஒரு கவிதை வார்த்தையற்றிருக்க வேண்டும்பறவைகளின் பறத்தல் போல நிலா உயர்வதைப் போல் காலத்தினுள் கவிதை இயக்கமில்லாதிருக்க வேண்டும் இரவு பின்னலிட்ட மரங்களை குறுங்கிளை

அடுத்த குறுங்கிளையாக நிலா விடுவிப்பது போல, பனிக்காலத்து இலைகளின் பின்புறமிருந்து நிலா ஞாபகம் ஞாபகமாக மனதை விடுவிப்பது போல ஒரு கவிதை காலத்தினுள் சலனமில்லாதிருக்க வேண்டும் நிலா உயர்வது போல் ஒரு கவிதை சமானமாய் இருக்க வேண்டும் நிஜத்திற்கு இணையாய் அல்ல எல்லாத்துயரத்திற்கும் ஒரு வெற்று வாசலைப் போல மேப்பிள் மர இலையைப் போல காதலுக்கு தலைசாயும் புற்கள் மற்றும் கடலுக்கு மேலாக இரண்டு வெளிச்சங்களைப் போல ஒரு கவிதை அர்த்தம் தரக்கூடாது கவிதையாக இருக்க வேண்டும்
**நன்றி பிரம்மராஜன்**

**எறும்புகளோடு பேச்சுவார்த்தை -வைரமுத்து**

**எறும்புகளே எறும்புகளே**
**உயிர்த்துளிகளின் ஊர்வலங்களே**
**பத்துகோடி ஆண்டுகள் முன்னே**
**பூமியில் ஊர்ந்த பூச்சியினமே**
**உலகின் மிகச்சிறிய ஆச்சரியமே**
**உங்களோடு பேசவேண்டும்**
**சிறிது நேரம் செவி சாய்ப்பீரா**?

"**நின்று பேசி நேரங்கழிக்க**
**நாங்கள் ஒன்றும் மனிதர்கள் இல்லை**
**எது கேட்பதாயினும்**
**எம்மோடு ஊர்ந்து வாரும்** "

**ஒரு செண்டிமீட்டரில்**
**ஊற்றி வைத்த உலகமே**
**அற்ப உயிரென்று**
**அவலபட்டதுண்டா**?

"**பேதை மனிதரே**

**மில்லிமீட்டர் அளவிலும்**
**எம்மினத்தில் உயிருண்டு**
**தன் எடை போல ஐம்பது மடங்கு**
**எறும்பு சுமக்கும் நீர் சுமபீரா**"

**சுகிர்தா ராணி பெண்ணே சிந்தனையாளர்**.

தேடு விக்கி பெண்களை நேசிக்கிறது- தெற்காசியா 2020 தமிழச்சி தங்கப்பாண்டியன் கவிஞர், பேச்சாளர், சமூக ஆர்வலர் மற்றும் அரசியல்வாதி மொழி கவனி தொகு தமிழச்சி தங்கப்பாண்டியன் பிறப்பு: 25 சூலை 1962) என்பவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண் கவிஞரும், சமூக ஆர்வலரும் அரசியல்வாதியும் ஆவார். தமிழச்சி தங்கப் பாண்டியன் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் **பதவியில்** மே 2019 – பதவியில் பிரதமர் நரேந்திர மோதி முன்னையவர் ஜே.ஜெயவர்த்தன் தொகுதி தென் சென்னை தனிப்பட்ட விவரங்கள் பிறப்பு சுமதி 25 ஏப்ரல் 1962 (அகவை 62) மல்லாங்கிணறு, விருதுநகர், இந்தியா அரசியல் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்

பெற்றோர் தங்க பாண்டியன் (முன்னாள் சமஉ) உறவினர் தங்கம் தென்னரசு (தம்பி)வாழிடம் சென்னை, தமிழ்நாடு, இந்தியாபணி எழுத்தாளர் அரசியல்வாதி விருதுகள் பாவேந்தர் பாரதிதாசன் விருது - 2009 இணையத்தளம் பிறப்பு தொகு தமிழச்சி தங்கபாண்டியன் விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணறு என்னும் சிற்றூரில் பிறந்தார். இவரது இயற்பெயர் சுமதி ஆகும். இவர் தமிழகத்தின் முன்னாள் வணிகவரித்துறை அமைச்சரான தங்கப்பாண்டியனின் மகளும், தமிழ்நாடு பள்ளிக்கல்வி அமைச்சகத்தின் முதல் பள்ளிக்கல்வித்துறை அமைச்சரான

(13.5.2006 – 15.5.2011) தங்கம் தென்னரசின் அக்காவும் ஆவார்.

கல்வி ஆசிரியர் பணி குடும்பம் அரசியல் படைப்புகள் தமிழ் நாடக அரங்கில் பங்களிப்புகள் தொகுப்புகள் போட்டியிட்ட தேர்தல்களும் முடிவுகளும் மேற்கோள்கள் வெளியிணைப்புகள்

இதுவும் மரப்பாச்சி என்ற சிறுகதையும் எழுத்தாளர் உமா மகேஸ்வரி அவர்களால் எழுதப்பட்டது இவர் ஆண்டிபட்டி பக்கத்தில் உள்ள போடிநாயக்கனூர் இவருடைய சொந்த ஊர் இன்று நவகாலத்தில் இவருடைய படைப்புகள் பெண்ணிய படைப்புகளாக பெரிதும் போற்றப்பட்டு பெண்ணே சிந்தனைகளை சமூகத்துக்கு எடுத்துரைக்கும் எழுத்தாளராக போற்றப்படுகிறார் இவருடைய கதைகள் கவிதைகள் நாவல்கள் அனைத்தும் பெண்ணே சிந்தனையை பெண் படும் கொடுமையை பெண்ணின் உணர்வுகளை அடக்கு முறையை பாலியல் சீண்டல்களை ஆணாதிக்க அவலத்தை தனது கதைகள் மூலம் பாடுபொருளாக கொண்டு அவரது கருத்தாளங்களை முன் வைக்கிறார் அதைப்பற்றிய லிங்க் தான் இது அலகு 4

இக்கதை முழுவதும் தலித் பெண்கள் படும் வேதனை வேற்றுமை சமூக வளங்கள் பெண்களுக்கு உண்டான பாலியல் சிந்தனைகள் முதலாளி தொழிலாளி வர்க்க வேறுபாடு ஜாதி வேறுபாடு ஒடுக்கு முறைகள் ஆணாதிக்க முறை பெண்களுக்கு ஏற்படும் அவலங்கள் போன்றவை தோல் உரிக்கப்படுகின்றன கருத்து என்றாலே பனங்கருக்கு எப்படி கைகளுக்குறுமோ அதைப்போல இந்த நாவலை படிக்கின்ற பொழுது எல்லாருடைய உள்ளமும் கருக்கு என்று கிழிக்கப்படும் என்று இக்கதைக்கு பெயர் சூட்டி தன்

சமுதாயத்தில் படும் வேதனையும் அவர் பட்ட அவமானங்களையும் சுயசரிதியாக பாமா அவர்கள் எழுதியிருப்பது நன்றாக புரிகின்றது.. அவரது பெண்ணே சிந்தனையும் தனி பெண்ணாக போராடும் ஒரு சமூக போராளியாகவும் இக்கதையில் தன் கருத்தை முன்னெடுத்து வைக்கிறார்.

இக்கதை முழுவதும் பெண்ணின் சிதைவுகள் பற்றியும் சமூக அவலங்கள் பற்றியும் முதலாளி தொழிலாளித்துவம் பற்றியும் ஜாதி வேறுபாடுகள் பற்றியும் எடுத்துரைக்கும் சமூக அக்கறை உள்ள நாவலாகும்.

இதுவும் திலகவதி ஐபிஎஸ் எழுதிய கல்மரம் என்ற நாவலாகும்-

ஜி எஸ் லட்சுமி என்ற எல்லாராலும் அழைக்கப்படுவர் அம்பை என்ற எழுத்தாளர் ஆவார் இவர் பன்முகப் படைப்பாளர் சமூக ஆர்வலர் எழுத்தாளர் பேச்சாளர் மொழிபெயர்ப்பாளர் ஆய்வாளர் என பல பரிணாமங்களை கொண்டவர் கோவையை சேர்ந்தவர் அவரைப் பற்றிய குறிப்புகள் இந்த லிங்கில் அடங்கியுள்ளன பெண்ணுக்கு ஏற்படும் சிறுமைகளையும் அவமானங்களையும் கொடுமைகளையும் ஆணாதிக்க வர்க்கத்தையும் இவர் தனது படைப்புகள் மூலம் சமூகத்துக்கு வெளிக்கொண்டுவரும் பெண் படைப்பாளிகளில் மிகச் சிறந்த எழுத்தாளர் ஆவார்.

அழகும் அறிவும் வாய்ந்த இவர் பெண்ணினத்துக்காக போராடக்கூடிய பெண்ணிய சிந்தனையாளர் தலித்து எழுத்தாளர்களின் வாய்மொழி சிந்தனை பேச்சாற்றல் கொண்ட தொடர்களை படைப்புகளை எல்லாம் வெளிக்கொண்டுவரும் ஆற்றல் பெற்றவர் பெண்கள் சமூகத்தில் முன்னேற வேண்டும் என்ற சமூக அக்கறை கொண்டவர் அவரைப் பற்றிய லிங்க் இதிலுள்ளது

"**வெண்ணிலா**
இந்தியத் தமிழக எழுத்தாளர்

அ. வெண்ணிலா (பிறப்பு: 10 ஆகத்து 1971) தமிழக எழுத்தாளரும், கவிஞரும் ஆவார். கவிஞர், சிறுகதை ஆசிரியர், கட்டுரையாளர், நாவலாசிரியர், ஆசிரியர், சிறு பத்திரிகை ஆசிரியர் என பன்முக ஈடுபாடுகளுடன் தமிழ் உலகில் இயங்கிவருகிறார். பெண்ணியம் சார்ந்த கருத்துகளை முன்னெடுத்து இலக்கியம் படைத்து வருவது வெண்ணிலாவின் தனித்துவமாகும். அன்றாட வாழ்வின் இன்னல்களை புனைவுகள் ஏதுமின்றி படைப்பாக்குவது இவரது ஆற்றலாகும். இவர் எழுதிய படைப்புகள் ஆங்கிலம், மலையாளம், இந்தி என பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நூல்கள் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி அளவிலான பாடத்திட்டங்களில் பாடமாகவும் இடம்பெற்றுள்ளன. 2009-2010 ஆம் ஆண்டு காலத்தில் தமிழகத்தின் சமச்சீர் கல்வி பாடத்திட்டக் குழுவில் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி புதிய பாடப்புத்தக உருவாக்கத்தில் பங்களிப்பு வழங்கியுள்ளார்.

அ. வெண்ணிலாபிறப்பு: ஆகத்து 10, 1971 (அகவை 53) வந்தவாசி: திருவண்ணாமலை மாவட்டம்தேசியம்: இந்தியர்சமயம்: இந்துவாழ்க்கைத் துணை: மு. முருகேஷ் பிள்ளைகள்: கவின்மொழி, நிலாபாரதி, அன்புபாரதி விருதுகள்: தமிழக அரசின் சிறந்த கவிதை நூலுக்கான விருது, புதுமைப்பித்தன் நினைவு விருது உட்பட பல அறக்கட்டளை விருதுகள். சென்னையில் ஆண்டுதோறும் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் (பபாசி) சார்பில் புத்தகக் காட்சி, நடைபெறுவது வழக்கம். 2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள புத்தக கண்காட்சியில் அ. வெண்ணிலா உட்பட ஆறு ஆளுமைகளுக்கு கலைஞர் பொறிகிழி விருது

வழங்கப்பட்டது.

"**இலக்கியச் செயல்பாடுகள் தொகு**

கரிசல் இலக்கியவாதி கி.ராவின் கதை சொல்லி மற்றும் புத்தகம் பேசுது இதழ்களின் ஆசிரியர் குழுவில் ஒருவராக வெண்ணிலா செயல்பட்டுள்ளார். சாகித்ய அகாதமிக்காக தமிழ்நாடு, இலங்கை, ஆத்திரேலியா, கனடா, பிரான்சு நாடுகளில் வாழும் தமிழ்ப்பெண் கவிஞர்களின் கவிதைகளை தொகுக்கும் பணியில் ஈடுபட்டார். 2002 ஆம் ஆண்டு ஐதராபாத்தில் நடைபெற்ற பன்னாட்டு பெண் எழுத்தாளர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாகப் பங்கேற்றார்.2011, சனவரியில் புது தில்லியில் நடைபெற்ற காமன்வெல்த் எழுத்தாளர்களுக்கான மாநாட்டில் தமிழகப் பிரதிநிதியாக கலந்து கொண்டார். ஒரிசாவில் நடைபெற்ற சார்க் இளம் கவிஞர்கள் மாநாடு,அசாம் மற்றும் மிசோரம் மாநிலங்களில் நடந்த பன்மொழிக் கவிஞர்கள் சந்திப்பு போன்ற நிகழ்ச்சிகளிலும் தமிழகத்தின் பிரதிநிதியாக வெண்ணிலா பங்கேற்றுள்ளார்.

எதிர்ப்படும் நண்பரின் முகம் பார்த்துப் புன்னகைக்கும் அளவிற்கேனும் சந்தோஷ மனநிலை வாய்த்தால் போதுமென்றிருக்கும் வாழ்க்கை.- சண்டையிட்டுக் கொண்ட இரவொன்றில் உன் மேல் பட்ட விரல்கள் அந்நியன் மேல்பட்ட உணர்வோடு உள்ளிழுத்துக் கொண்ட நினைவு உன்னோடு சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் இந்த கணத்தில் பின்னிருந்து கண் பொத்தி விளையாடுகிறது.- கீழே விழுந்து அரற்றிக் கொண்டிருக்கும் வெயில்-தன்னை அணைத்துக்கொள்ளும் கிளைகள் இல்லா வெட்டப்பட்ட மரத்தின் கீழ்.-எதைப் பற்றியும் எழுதுகிறாய் என்னைப் பற்றி எழுதினேன் தினம் தினம் கெஞ்சுவாய். மழையில் நனைவது சுகமா? மழைப் பற்றி எழுதுவது சுகமா?-யுத்தம்

பற்றி எனக்குத் தெரிந்திருக்க நியாமில்லைதான். ஆண்டுகளின் புள்ளி விவரங்களாக்கப்பட்டு பாட புத்தகங்களில் யுத்தங்கள் வந்த பிறகே பிறந்துள்ளேன். விமானம் பறப்பதை அருகில் பார்க்கவே 25 வருடங்கள் பிடித்த எனக்கு வெடிகுண்டு வீசும் விமானங்கள் பற்றி கற்பனை செய்ய முடியவில்லை. எட்டுக்கு எட்டடி இருட்டறையில் வாழ்ந்து பழகியுள்ள என்னால் ஓரளவுக்கு பதுங்கு குழிகளின் அனுபவம் உணர முடிகிறது. -- துண்டு ஒன்றை கட்டிக்கொண்டு அம்மாவாக முடிகிறது குழந்தைகளால். – குழந்தையாக முடியாமல்

**Additional Resources:**

Smart board

WebSide

www.sangathamizh.com

**Practice Questions:**

பெண்ணிய வகைகள் குறித்து எழுதுக
2. தீவிரவாத பெண்ணியம் குறித்து விவரி
3. சோசியலிச பெண்ணியம் பற்றி குறிப்பு வரைக
4. பெண்ணியம் என்றால் என்ன?.
5. இக்காலபெண் எழுத்தாளர்களை பற்றி கட்டுரை வரைக

**References:**

1.இர. பிரேமா பெண்ணிய சிந்தனைகள்
2. அரங்க மல்லிகா. பெண்ணியக் கோட்பாடுகள்
3. நவீன பெண் கவிஞர்கள் கவிதைகளில் தொகுப்பு (கௌரா வெளியீடு)